செய்தி வெளியீடு எண் :47 நாள்:27.04.2018

***தேனி மாவட்டம்***
***விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***தலைமையில் நடைபெற்றது:-***

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (27.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தேனி மாவட்டத்தில் ஆண்டு இயல்பான மழை அளவு 829.8 மி.மீ ஆகும். இது நாள் வரை 169.25 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் சராசரி மழை அளவு 99 மி.மீ ஆகும். இதுவரை 93.5 மி.மீ மழையானது தேனி மாவட்டத்தில் ஏப்ரல் மாதத்தில் பெறப்பட்டுள்ளது. விவசாயிகள் இம்மழையினை பயன்படுத்தி கோடை உழவு மேற்கொள்ளவும், விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வரப்புகள் சரி செய்தல் மற்றும் எலிப்பொறிகள் அமைப்பதன் மூலமாக எலியினை கட்டுப்படுத்துவது குறித்து, விவசாயிகள் தங்கள் பயிரினை அசாதாரண சூழ்நிலைகளிலிருந்து காத்துக் கொள்ள ஏதுவாக நடப்பு காரீப் பருவத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட குறு வட்டங்கள் மற்றும் பயிர்களுக்கு காப்பீட்டு பிரிமியத் தொகையினை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், வணிக வங்கி மற்றும் பொது சேவை மையங்களில் செலுத்தி பயனடைவது குறித்தும், வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசு உழவன் செயலி (Application) மூலம் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு மானியத் திட்டங்கள், கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களின் விதை மற்றும் உரங்களின் இருப்பு விபரம், விவசாயிகளுக்குத் தேவைப்படும் இடு பொருட்களுக்கான முன் பதிவு, பயிர் காப்பீடு குறித்த விபரம், வேளாண்மை பொறியியல் துறையில் வேளாண் இயந்திரம் வாடகைக்கு பதிவு செய்தல், சந்தை விலை நிலவரம், வானிலை முன் அறிவிப்பு மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் வருகை போன்ற 9 வகையான விபரங்களை விவசாயிகள் தெரிந்து கொண்டு பயனடைய வேண்டும்.

மாவட்டத்தில் எதிர் வரும் ஜுன் மாதம் பெரியார் அணை திறக்கும் பட்சத்தில் தேனி மாவட்டத்தில் இயல்பான குறுவை சாகுபடிப் பரப்பான 5400 எக்டர் முழுமையும் சாகுபடி எதிர்பார்க்கப்படுவதால், குறுவை சாகுபடிப் பருவத்திற்கு ஏற்ற நெல் ரகங்களான NLR 34449, NLR 13 மற்றும் கோ-51 போன்ற ரகங்கள் 187 மெ.டன் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தற்பொழுது பெறப்படும் கோடை மழையினை பயன்படுத்தி விவசாயிகள் குறுகிய காலப் பயிர்கள் சாகுபடி செய்யும் பொருட்டு கம்பு விதை 3 மெ.டன்னும், உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப் பயிர் போன்ற பயறு வகை விதைகள் 32 மெ.டன்னும் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், மேலும் சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா, 1370 மெ.டன்னும், DAP 1463 மெ.டன்னும், பொட்டாஷ் 1037 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 2371 மெ.டன்னும் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு குறைந்த நீரினை பயன்படுத்தி அதிக பரப்பில் சாகுபடி செய்ய ஏதுவாக நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரை 100% மானியமும், இதர விவசாயிகளுக்கு 12.5 ஏக்கர் வரை 75% மானியமும், உயிர் முறை பூச்சி மேலாண்மை திட்டத்தின் கீழ் சூரிய விளக்கு பொறி, இனக்கவர்ச்சி பொறி, மஞ்சள் வண்ண ஒட்டு அட்டை விவசாயிகளுக்கு மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, விவசாயிகள் அரசின் திட்டங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றிட வேண்டும்.

மேலும், மாவட்டத்தில் எதிர் வரும் 02.05.2018 அன்று கிரிஷி கல்யாண் காரியசாலா என்ற திட்டத்தின் கீழ் அனைத்து வட்டாரங்களிலும் விவசாயிகள் நல்வாழ்வு தினம் கடைபிடிக்கப்படவுள்ளது இதில் விவசாயிகளுக்கு கருத்தரங்குகள், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் அனைத்து சகோதர துறைகளிலும் விவசாயிகளுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய செயல் விளக்கங்கள், மானியங்கள் பற்றிய விபரங்கள், கால்நடைகளுக்கான மருத்துவ பரிசோதனை முகாம், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்ணீர் பாசனம் குறித்த கண்காட்சி, பயிர் காப்பீட்டுக்கான பதிவு மையங்கள் ஆகியவை இடம் பெறவுள்ளது.

ஒவ்வொரு பிரதி வாரம் புதன் கிழமைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், அனைத்துத்துறை அலுவலர்களுடன் வட்டார அளவில் விவசாயிகளை சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி 09.05.2018 உத்தமபாளையம், 16.05.2018 போடிநாயக்கனூர், 23.05.2018 கடமலைக்குண்டு, 30.05.2018 பெரியகுளம், 06.06.2018 சின்னமனூர், 13.06.2018 கம்பம், 20.06.2018 ஆண்டிபட்டி, 27.06.2018 தேனி ஆகிய வட்டாரங்களில் விவசாயிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை நேரடியாக சந்தித்து குறைகளை தெரிவிக்கலாம். அனுமதி வழங்கப்பட்டுள்ள குளங்களில் எடுக்கப்படும் வண்டல் மண்ணை கரை ஓரங்கள் மற்றும் விவசாய நிலங்களுக்கு விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்ற விவசாயிகள், பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

தேனி மாவட்டத்தில் 30 ஏக்கர் நிலப்பரப்பளவில் உணவுப் பூங்கா அமைப்பதற்கு உண்டான நிலத்தினை தேர்வு செய்ய மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளவும், இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் முன் வைத்தனர். விவசாயிகளால் வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், வேளாண்மை இணை இயக்குநர்(பொ) எம்.சுப்பையா அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சொ.சந்திரசேகரன் அவர்கள், அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**